1984 மார்ச் 29]

அடுத்தபடியாக, பர்மா, இலங்கை ஆகிய இடங்களிலிருந்து வருகின்ற மக்கள், 10 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாகப் பணம் கொண்டு வந்தால், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இந்த விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. எடுக்கப்பட்ட நிலம் இன்னும் சில கொடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் உச்ச நீதி மன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கி இருப்பதுதான்.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, இந்தமாதிரி வினியோகிக்கப்பட்ட நிலங்களை அவர்கள் விற்றுவிடும்போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நிலத்தை யாரும் விற்க முடியாது. அப்படி விற்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவர்களும் 10 ஆண்டு காலத்திற்குள்ளாக அதை விற்கக் கூடாது என்று விதிமுறை சொல்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உபரி நிலமாக சுமார் 600 ஏக்கர் எடுக்கப்பட்டதாகவும் சுமார் 16 பேருக்கு வினியோகம் செய்யப்பட்டதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு நபருக்கு எத்தனை ஏக்கர் வழங்கப்பட்டது? சேலம் மாவட்டத்தில் இன்னும் உபரியாக இருக்கக்கூடிய நிலம் எவ்வளவு? எவ்வளவு காலத்திற்குள் அவை ஆர்ஜிதம் செய்யப்பட்டு வினியோகிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் 3 ஏக்கர் புஞ்செய் நிலம் அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நஞ்செய் நிலம் இப்போது கொடுக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சில நிலங்கள் சம்பந்தப்பட்டவரை உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆகையால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

### திருப்புவனம் புதூரிலுள்ள பிரமனூர் ஊரணியை ஆக்கிரமிப்பு செய்துள்ள தனி நபர்கள்.

392—(*வினா எண். 22478) திரு. க. பாரமலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை தொகுதி திருப்புவனம் புதூரில் மாரியம்மன் கோவிலுக்குப் பின்புறம் பிரமனூர் செல்லும் கால்வாயை ஒட்டி உள்ள ஊரணியைத் தனி நபர்கள் ஆக்கிரமித்து விவசாயம் செய்துவருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ): திருப்புவனம் புதூர் கிராம புல எண். 92/2 ஊரணி புறம்போக்கு என வகை செய்யப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 1.73 ஹெக்டேர். இந்நிலம் திருவாளர்கள் பாலகுரு, சோகர், அய்யனார், ஆதி, நாராயணம், முத்து மற்றும் பாண்டி ஆகிய ஏழு பேருடைய ஆக்கிரமிப்பில் உள்ளது. ஆக்கிரமிப்பை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போது நெல் பயிரிடப்பட்டிருக்கிறது. அறுவடை முடிந்த பிறகு, ஆக்கிரமிப்புகள் வெளியேற்றப்படும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அந்த இடம் புறம்போக்கு என்று வகை செய்யப்பட்டிருந்தாலும், பொது மக்கள் எல்லாம் குளிப்பதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இந்த அளவிற்கு வருவாய்த்துறை விட்டு விட்டார்களா ? 1979 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்றபோது, அங்கே இருக்கிற கிராம மக்கள் சொன்ன வேண்டுகோளை ஏற்று, உடனடியாக வெளியேற்றப்பட வேண்டுமென்ற ஆணையைப் பிறப்பித்திருந்தார்கள். இப்போது 4 ஆண்டுகள் ஆகியும் கூட, இன்னும் அவர்கள் வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு ஏதாவது விசேஷ காரணம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விசேஷமான காரணம் என்று என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி விசேஷமான காரணம் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்தால், அந்த விசேஷமான காரணம் நல்ல காரணமாக இருந்தால், விட்டுவிடலாம். அப்படி இல்லையென்றால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றுவதை நீதிமன்றத்திலே வழக்குப் போட்டிருந்தார்கள். ஆனாலும் அதை எதிர்த்து, வருவாய்த்துறை அதிகாரிகள் ஒரு கவுண்டர் அபிடவிட் போட்டு, அந்த நிறுத்த உத்தரவை, ஸ்டே வெகேட் செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அதைப் பல நிலைகளில் நாங்கள் எடுத்துச் சொல்லியும், அவர்கள் செயல்படாத காரணத்தால், அது தாமதமாகப் போய்விட்டது. நம்முடைய ஹரிஜன நல அமைச்சர் அவர்கள் கூட அந்த இடத்திற்கு வந்திருந்தார்கள். நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்வது, ஒவ்வொரு 6 மாதமும்,

உடனடியாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையென்றால் பயிரிட்டுவிடுவார்கள். இது நிச்சயமாக அவர்களை வெளியேற்றுவதற்கு உதவியாக இராது. ஆகவே இந்த பயிர் முடிந்தவுடன் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அந்த 7 பேர்களில் 5 பேர் நிலமற்ற ஏழைகள். 2 பேர் வசதி படைத்தவர்கள். நீதிமன்றத்திற்குப் போனார்கள் என்று சொன்னார்கள். ஆனால் போகவில்லை. அறுவடை முடிந்தவுடன் வெளியேற்றப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்படி, ஊரணிகள், கண்மாய்கள், குளங்கள் போன்றவைகளை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், கோர்ட்டிலே போய் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். ஆக்கிரமிப்புகளை அகற்ற முடிவதில்லை. எனவே இப்படிப் பொதுவான இடங்களில் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் கோர்ட்டுக்குப் போகாமல் தடுப்பதற்கு சட்டம் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல யோசனை. இது சட்டத்துறையுடன் ஆராய்ந்து செயல்பட வேண்டிய யோசனை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மாநிலம் முழுவதும் குளங்கள், ஊரணிகள் போன்றவைகள் ஆக்கிரமிக்கப்படுவது ஆயிரக்கணக்கான அளவில் இருக்கின்றன. எனவே சமுதாயத் தூய்மை கெட்டுவிடுகிறது. வருவாய்த்துறையால் இதை அப்புறப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு, அதை மாற்றுவதில், ஏதாவது சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதைப்பற்றி யோசிக்கும்.

1982-83 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழத்தின் அளவு.

498—(*வினா எண். 21171) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1982-83 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழத்தின் அளவு எவ்வளவு ?